# மேட்டுப்பாளையம் நகராட்சி

26.05.2021ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பழைய குடிநீர்த்திட்டத்தில் சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் நீரேற்றம் செய்ய இரண்டு 30hp மோட்டார் பழுதுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் யூனிட் எண். I கடந்த 10.03.2021 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது பம்பின் ஷாப்டு உடைந்து, பேரிங்குகள் பழுதாகி நின்று விட்டது. பம்பைப் பிரித்துப் பார்த்த போது பம்பின் புஸ்கள், பேரிங்குகள், நெக்ரிங் மற்றும் ஷாப்டு மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>தலைமை நீரேற்று நிலையம் கூட்டு குடிநீர்த்திட்டத்தில் உள்ள 30hp பம்பின் இம்பள்ளர் தேய்ந்து புஸ்கள் உடைந்ததால் (Raw water) நீரேற்றம் குறைந்து சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் குறைவதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை ஆதலால் பழுதான பம்பின் இம்பள்ளர்கள், பேரிங்குகள், புஸ்கள் மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.47,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான பேக்கிங் ரோப், டயர்கப்ளர், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ராவாட்டர் ஸ்டைனர் (Strainer) மற்றும் பகிர்மானப் பிரிவிற்குத் தேவையான CID ஜாயின்டுகள் ஸ்பிண்டில்ராடு மற்றும் செக்நட் பழுது அகற்றுதல் , பழுதாக விநியோகித்தல் மற்றும் அனைத்து தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,31,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>'அ','ஆ'மற்றும்'இ'க்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,14,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பகிர்மான குழாய்க்கு தேவையான பம்பின் பழுதுகள், உதிரிபாகங்கள் அவசியம் என்பதால் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.001209/2021/இ1 |
| 2 | மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன மூன்று குடிநீர்த்திட்டங்களும் ஆற்றில் Raw water ஐ, நீரேற்றம் செய்து வடிதளம் மூலம் சுத்தப்படுத்தப்பட்டு நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆற்றில் வரும் நீரில் கிருமிகளை அழிக்க Chlorine வாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பில் Cylinderகள் காலியாக இருப்பதாலும் இனிவரும் காலங்களில் கூடுதலாக தேவைப்படுவதாலும் ஒரு ஆண்டுக்கு தேவைக்கேற்ப வாங்கிவைக்கவும் (2021 –2022) Cylinder கள் ஆய்வு செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இப்பணியினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1208/2021/இ1 |
| 3 | இந்நகராட்சிக்கு எதிராக சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் பவானி ஆற்றில் கழிவுநீர் கலப்பது தொடர்பாக வழக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. வழக்கு (எண்.18/2017, 58/2017) களை நகராட்சி சார்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகி வாதாடவும், வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டதற்கும் அரசு வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் தொகை ரூ.30,000/— வழங்குமாறு கேட்டு கடிதம் அளித்துள்ளார். மேற்படி கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும், வழக்குக் கட்டணமாக தொகை ரூ. 30,000/—ஐ வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2679/2017/இ1 |

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தலைமைநீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பம்பிங் செய்யும் போது அதிக அழுத்தத்தின் காரணமாகவும், மின்தடை ஏற்பட்டவுடன் அதிக மின்னோட்டம் காரணமாக மோட்டார் இயக்கும் போது பம்பிங் மெயின் உடைப்பு ஏற்படுகிறது. மேலும் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்யும், பொதுக் குழாய், பொது கழிப்பிடங்களுக்கு தேவையான உதிரிசாமான்கள் விநியோகம் செய்யவும், குடிநீர் அவசர அவசியம் கருதி, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் நகராட்சி விதி 1920ன்படி பிரிவு 15 (section 15)ல் மேற்கொண்ட செலவினம் ரூ.4,98,776/—ஐ மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்த வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2020 —2021ம் ஆண்டு (ந.க.எண். ஆ3 /2327/2020, நாள்.23.03.2020) ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் —2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.400/— என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே, 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.05.2021 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.21,71,600/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1638/2016/எச்1 |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள அண்ணாசிலை மற்றும் ஊட்டி ரோட்டில் உள்ள காந்தி சிலையை சுற்றி பாதுகாப்பு சுற்றுவேலி அமைக்க நீதிமன்ற ஆணையின் படி அப்பணியினை விரைந்து முடித்து அறிக்கை வழங்குமாறு காவல் ஆய்வாளர் காவல்நிலையம் மேட்டுப்பாளையம் அவர்களின் கேட்டு கொண்டதற்கிணங்க அப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920ன் 15வது விதியின் கீழ் மேற்கொண்ட ரூ.1.00 இலட்சம் செலவினத்தை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1846/2020/இ1 |
| 7 | இந்நகராட்சியின் 2020 —2021ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.984/2021/அ3 |
| 8 | இந்நகராட்சியில் 2021 —2022 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் அ4 காப்பியர், லீகல் காப்பியர் மற்றும் கோப்புகளுக்கு தேவைப்படும் ரேப்பர் ஷீட்கள், வெள்ளைத்தாள்கள், வரிசெலுத்தும் இரசீதுகள் தகவல் மையத்திற்கு தேவைப்படும் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அம்மா உணவகத்திற்கு தேவைப்படும் இரசீதுகள் அனைத்தும் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10 இலட்சத்திற்கும் சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுது பொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் இண்ட்1312 நிறுவனத்திடமிருந்து இவ்வாண்டிற்கான எழுதுபொருட்கள் வாங்கிக்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1046/2021/டி1 |
| 9 | இந்நகராட்சி பகுதியில் TURIP சாலை திட்டப்பணிகள் விவரத்தினையும் மற்றும் வளர்ச்சிப் பணிகள் விவரத்தினையும் Flame Advertising நிறுவனம் மூலமாக பல்வேறு நாளிதழ்களிலும், மாலைமலர் நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காண் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ.94605/—, ரூ.9500/— ஐ 1920 வருடத்திய நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1 |

| | |
|---|---|
| 10 | இந்நகராட்சி பயன்பாட்டிலுள்ள ஜெனரேட்டரில் (65KVA) தானியங்கி மோட்டாரை இயக்கக் கூடிய பேட்டரி (12V) மற்றும் பேட்டரி ரீசார்ஜர் (12V5A) ஆகியவை பழுதடைந்து விட்டது. இங்கு அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. பேட்டரி பழுதானதால் ஜெனரேட்டரை இயக்க முடியவில்லை. இதனால் அலுவலக கணினி வரி வசூல் மற்றும் அலுவலக பணிகள் செய்ய முடியவில்லை. எனவே, புதிய பேட்டரி பொருத்த இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதி 15ன்கீழ் ரூ.27376/– செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1846/2020/இ1 |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாதினசரி மார்க்கெட் நுழைவு கட்டண வசூல் உரிமம் மற்றும் பேருந்து நிலைய நுழைவுக் கட்டண வசூல் உரிமம் ஆகியவைகள் 01.04.2021 முதல் துறைரீதியாக வசூல் பணி மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் அதற்கு தேவையான இரசீது புத்தகங்கள் அச்சடிக்க கீழ்க்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br>1. ஸ்ரீ குமரன் பிரிண்டர்ஸ் 125புக் ரூ.2750/–<br>(100 Sheet / Book 200 நெ வைத்து)<br>2. பாரத் பிரஸ் 125 புக் ரூ.3350/–<br>(100 Sheet 1 புக்)<br>3. ஏசியன் பிரிண்டர்ஸ் 125புக் ரூ.3200/–<br>100 Sheet<br>மேலே கண்டுள்ள விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ குமரன் பிரிண்டர்ஸ்–ன் விலைப்புள்ளியை ஏற்று பணி முடிக்க உத்தரவு வழங்கலாம்.<br>மேலும் துறைரீதியான வசூல் செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு தேவையான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ குமரன் பிரிண்டர்ஸ்க்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4618/2020/அ1 |
| 12 | ஜவஹர்லால் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு உண்டான மின் இணைப்பு ஒயரிங் செய்யவும் மதிப்பு கட்டணம் ரூ. 1,15,662/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரத்துஅறநூற்றி அறுபத்தி இரண்டு மட்டும்) தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந..க.எண்.5483/2020/இ1 |
| 13 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டருக்கு புதிய பேட்டரி பொருத்துவதற்கு தொகை ரூ.27376/–ஐ தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந..க.எண்.1846/2020/இ1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.30.01.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016 நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016 நாள். 21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019, நாள்.28.02.2019ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 30.04.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.2 நாள்.29.01.2021ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் மேலும் 3 மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந..க.எண்.494/2019/எச்1 |

15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 389, நாள் 09.09.2016 இன்படி KFW assisted SMIF – TN – II -2 ன் நிதி உதவியுடன் ரூ. 91.70 கோடி மதிப்பீட்டில் புதியதாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதி ஆதாரம் மற்றும் நிதி ஒதுக்கீடு வழிவகை பட்டியல் கீழ்க்காணும் விபரப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|
| TNUDFமற்றும் KFW assisted SMIF-TN-II-2 நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன் | 18.34 | 20% |
| PSGF under KFW assisted KWF GF–ஐ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மான்யம் | 64.19 | 70% |
| நகராட்சி பங்குத் தொகை | 9.17 | 10% |
| மொத்தம் | 91.70 | 100% |

மேலும் ரயில்வே நிர்வாகம் தேதிய நெடுச்ஞசாலை, மாநில நெடுஞ்சாலை ஆலை துறைகளிடமிருந்து தடையின்மை சான்று கிடைக்க பெற கால தாமதம் ஏற்பட்டு வருகின்ற காரணத்தால் பணிகள் உரிய காலத்தில் பணிகள் முடிக்கப்படவில்லை.

எனவே PSGF Under KFw assisted KFW GF ன் நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மானியத்தொகை ரூ. 64.19 கோடி உபயோகம் செய்து கொள்ள தெரிவித்துள்ள கடிதத்தின்படி 3 ஆண்டு காலத்திற்கு உபயோகம் செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது என்பதால் மேற்காண் கடிதத்தில் தெரிவித்துள்ள Conditions of Grand (நிபந்தனையின் படி மான்யம்) ன் படி PSGF Under KFW assisted KWF GF ஐ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மான்ய தொகை ரூ. 64.19/- கோடி தொகையினை உபயோகம் செய்து கொள்ள 31.12.2022 ஆம் ஆண்டு வரை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி கேட்டுக்கொள்கிறேன்.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

---

16 இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஹவுசிங் யூனிட் பகுதியில் வசிக்கும் திரு.வி.பால்ராஜ் என்பவர் நகராட்சி எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுப்பாளையத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண்.O.S.No.75/2021க்கு எதிராக நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி எதிர்வாதிட ஆகும் செலவினம் ரூ.7500/–ஐ நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.890/2021/எப்1

---

17 இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஹவுசிங் யூனிட் பகுதியில் வசிக்கும் திருமதி. சரஸ்வதி என்பவர் நகராட்சிக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுப்பாளையத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண். O.S.No.39/2021க்கு எதிராக நகராட்சி ஆணையாளர் சார்பாக ஆஜராகி எதிர்வாதிட ஆகும் செலவினம் ரூ.7500/–ஐ நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.700/2021/எப்1

---

18 இந்நகராட்சிக்குட்பட்ட அன்னூர்ரோடு பகுதியிலுள்ள ஸ்ரீ சக்தி தியேட்டர் நிறுவனத்தாரால் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.E.P.3/2019ல் நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வாதிட வழக்குக்கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கும்படி கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.வி.செந்தில்குமார் என்பவர் பட்டியல் வழங்கியுள்ளார். எனவே, மேற்படி செலவினம் ரூ.5000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7426/1998/எப்1

| | |
|---|---|
| 19 | இந்நகராட்சிக்குட்பட்ட தாசம்பாளையம் ரோட்டில் வசிக்கும் ரங்கம்மாள் மற்றும் பலர் நகராட்சி ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாகச் சேர்த்து தொடர்ந்துள்ள வழக்கு எண்.313/2018ல் நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வாதிட வழக்குக்கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கும்படி கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.வி.செந்தில்குமார் என்பவர் பட்டியல் வழங்கியுள்ளார். எனவே, மேற்படி செலவினம் ரூ.5000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4377/2018/எப்1 |
| 20 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40B 1483க்கு தகுதிச் சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,50,000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.8621/2021/எச்1 |
| 21 | இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மைப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொதுச் சுகாதாரம் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மேலும் 04.06.2021 முதல் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளின் 2018–2019ஆம் நிதியாண்டின் கீழ் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் சுத்தம் செய்து புதுப்பிக்கும் பணிக்கு ரூ. 2,15,00,000/–க்கு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் 4.85% மதிப்பீட்டிற்கு அதிகமாக ரூ. 2,15,00,000/–க்கு ரூ. 2,37,689/– ஆக மொத்தம் ரூ. 2,17,37,289/– தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். அதிகமாக கொடுக்கப்பட்ட தொகையினை ரூ. 2,37,689/– ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண் 216, நாள் 28.02.2019ஆம் தேதியில் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு கூடுதலாக செலவினம் செய்யப்பட்ட தொகை ரூ. 2,15,000/– ஐ ஒப்பந்ததாரர்க்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1845 / 2018/ இ1) |
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணிப் பிரிவில், சுமார் 28 கணிணிகள், 2 ஆல் இன் ஒன் கணிணிகள், சர்வர், 13 எண்கள் லேசர் ஜெட் பிரிண்டர்கள், ஆல் இன் ஒன் பிரிண்டர், 2 எண்கள் டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் மற்றும் 8 port, 24 port switch கள் மற்றும் இதர சாமான்கள் ஆண்டு பராமரிப்பு (AMC) 2021–2022க்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1365 / 2021/ இ1) |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணிணிப் பிரிவில் உள்ள 50 கணிணிகளுக்கு ஆண்டி வைரஸ் ( Anti Virus) 30.05.2021 வுடன் முடிவடைவதால் கணிணிகள் பாதுகாக்கும் பொருட்டு, ஆண்டி வைரஸ் அமைப்பது அவசியமாகிறது. ஆததால் புதிதாக 30 கணிணிகளுக்கு ஆன்டி வைரஸ் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1366 / 2021/ இ1) |

| | |
|---|---|
| 25 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட தலைமை நீரேற்ற நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர், நகரில் நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பம்பிங் செய்யும் போது அதிக அழுத்தத்தின் காரணமாகவும் மின்தடை ஏற்பட்டவுடன், அதிக மின்னோட்டம் காரணமாக மோட்டார் இயக்கும்போது பம்பிங் மெயின் உடைப்பு ஏற்படுகிறது. மேலும் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்பு சரிசெய்யவும், பொதுக்குழாய், பொது கழிப்பிடத்திற்கு தேவையான உதிரிசாமான்கள் விநியோகம் செய்யவும் ஆகும் செலவினம் ரூ. 5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1345 / 2021/ இ1) |
| 26 | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டசேமநல நிதித் தொகைக்கு 1989 – 1990லிருந்து 2019–2020 வரை 30 வருடங்களாக வட்டி கணக்கிடப்படாமல் உள்ளது. மற்ற நகராட்சிகளில் தனியாரிடம் (Consultant) ஒப்படைத்து வட்டி கணக்கிடப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் பணியாளர்களிடம் பிடித்தம் செய்த சேமநல நிதித் தொகைக்கு வட்டி கணக்கிட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு பிரேரணை அனுப்ப வேண்டியுள்ளதால் வட்டி கணக்கீடு செய்ய தனியாரிடம் ஒப்படைக்க உத்தேச செலவினமாக ரூ.3,50,000/– செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 2355 / 2016/ பி2) |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகிளில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால், இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 294, நாள் 31.12.2020 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு. எம். வேலுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் 04.05.2021 அன்று முடிவடைகிறது.<br>தற்போது நகரில் அனைத்து பகுதிகளிலும் கொரோனா தொற்று அதிக அளவில் இருப்பதாலும், அனைத்து பகுதிகளுக்கும் அரசால் ஊரடங்கு அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்த புள்ளிகள் கோர இயலாத நிலை உள்ளது. எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திரு. எம். வேலுசாமி ஒப்பந்ததாரர் 05.05.2021 முதல் 31.07.2021 வரை 88 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம் |